Registered as a Newspaper in Ceylon

ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி — National Tamil Daily

வைகாசி 8 (23-3-66) இதழ் 44

விசுவாவசு பங்குனி 10 ஜூல்கஃ பிறை 29 புதன்கிழமை

சந்தா விபரம்

தினப் பதிப்பு	சதம்	10
வாரமலர்	"	20

இலங்கை - இந்தியா

1 வருடம்	ரூபா	50-00
6 மாதம்	ரூபா	26-00
3 மாதம்	ரூபா	14-00

மலாயா

1 வருடம்	ரூபா	70-00
6 மாதம்	ரூபா	38-50
3 மாதம்	ரூபா	20-50

இராணுவ உதவி கோருவார்

வாஷிங்டன், மார்ச் 22

இம்மாதம் 25-ம் திகதி அமெரிக்காவுக்கு விஜயம் செய்யும் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அதிபர் ஜோன்ஸனுடன் பேச்சுக்கள் நடத்தும் பொழுது, இந்தியாவுக்கு இராணுவ உதவி பெறுவது குறித்து வற்புறுத்துவார் என்று இங்கு கூறப்படுகிறது.

டி. எஸ். நினைவு தினம்

புதிய முத்திரை வெளியீடு

பல இடங்களிலும் விசேஷ நிகழ்ச்சிகள்

கொழும்பு, செவ்வாய்

இலங்கையின் முதலாவது பிரதமர் திரு. டி. எஸ். சேனநாயக்காவின் பதினான்காவது சிரார்த்ததினம் இன்று நாடுபூராவும் சிறப்பாகக்கொண்டாடப்பட்டது. சிரார்த்த தினத்தைக் குறிக்கும் வைபவங்கள், பிரார்த்தனைகள் நாட்டின் பல பகுதிகளிலும் இன்று நடைபெற்றன. முதலாவது பிரதமரின் ஞாபகார்த்தமாகப் புதிய 10 சத முத்திரைகள் இன்று காலை வெளியிடப்பட்டன.

இன்றுகாலை எட்டு மணிக்கு ராஜாங்க மந்திரியும் தற்காலிகப் பிரதமருமான திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா டி. எஸ். சேனநாயக்கா ஞாபகார்த்த முதலாவது முத்திரையை வாங்கியதைத்தொடர்ந்து சிரார்த்த தின வைபவங்கள் ஆரம்பமாகின.

ஜனப்பிரதிநிதிகள் சபைக்குமுன்பாக அமைக்கப்பட்டுள்ள டி. எஸ். சேனநாயக்காவின் உருவச்சிலையை திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா இன்றுகாலை திரைநீக்கம் செய்தார். கொழும்பு நகர மேயர் திரு. ஜபீர் ஏ காதர் டி. எஸ் சேனநாயக்கா உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்தார்.

இந்த வைபவத்தில் சென்ட்சபைத் தலைவர் திரு. ஏ. ரத்னாயக்கா, சபாநாயகர் சர். அல்பேர்ட் பீரிஸ், உட்பட எம் பி.க்களும் சென்ட்டர்களும் வெளிநாட்டுத்தூதுவர்களும் மற்றும் முக்கிய பிரமுகர்களும் கலந்துகொண்டனர்,

இன்று மாலை 4 மணிக்கு கொழும்பு புதிய நகர மண்டபத்தில் பொதுக்கூட்டமொன்று நடைபெற்றது. சென்ட் சபைத் தலைவர் திரு. ஏ. ரத்னாயக்கா தலைமையில் நடைபெற்ற இப்பொதுக்கூட்டத்தில் பல்வேறு அரசியல் கட்சித்தலைவர்களும் மதகுருமார்களும் கலந்துகொண்டு மறைந்த பிரதமர் திரு டி எஸ் சேனநாயக்காவின் உயரிய சேவைகள் குறித்து பாராட்டிப் பேசினர்

இதுதவிர இன்று கண்டி, காலி, நுவரேலியா, திருக்கோணமலை மற்றும் பல இடங்களிலும்சேனநாயக்கா ஞாபகார்த்த கூட்டங்கள் நடைபெற்றன.

யாழ் மேயர் பிரச்னை

விசாரணை முடிவடைந்ததும் இன்று தீர்ப்பு வழங்கப்படும்

யாழ்ப்பாணம். புதன்

யாழ்ப்பாணம் மேயர் பிரச்னை சம்பந்தமான வழக்கின் தீர்ப்பு இன்று வழங்கப்படும். இவ்வழக்கு விசாரணை நேற்றுக் காலை யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திரு. என். எம். ஜே. ராஜேந்திரம் முன்னிலையில் சுமார் 4 மணி நேரம் நடைபெற்றது.

மனுதாரான மேயர் திரு. எஸ். நாகராஜா சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு எஸ். சூரசங்காரமும், எதிர்மனுதாரான மாநகரசபை கமிஷனர் திரு. ஹட்சன் செல்வராசா சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு சி. பொன்னம்பலமும் நேற்றைய விசாரணையின் போது தங்கள் பக்க வாதங்களை எடுத்துக் கூறினார்கள்.

யாழ்ப்பாணம் மேயர் திரு. எஸ். நாகராஜா மீது ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஊர்ஜிதம் செய்வதற்கு இம்மாதம் 24-ம் திகதி (நாளை) கூட்டப்படவிருக்கும் விசேஷ கூட்டத்தைத் தடைசெய்வதற்கான உத்தரவை வழங்கும்படி மாவட்ட நீதிபதியிடம் மேயரினால் சமர்ப்பிக்கப்பட்ட மனு சம்பந்தமாகவே நேற்று விசாரணை நடைபெற்றது.

விசாரணையைப் பார்ப்பதற்கு கோர்டின் உள்ளேயும் வெளியேயும் பலர் திரண்டிருந்தனர். நேற்றுக்காலை 10-30 மணிக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்டு பிற்பகல் 4 மணிக்கு முடிவுற்றது.

முதலாவதாக மனுதாரான மேயர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. எஸ். சூரசங்காரம் தமது பக்கத்து வாதத்தில் கூறியதாவது:-

விசேஷ கூட்டத்திற்குத் தடைஉத்தரவு விதிக்காவிட்டால் சட்டப்படி நம்பிக்கையில்லாத் தீர்மானம் செல்லுபடியாகாத படியால் தற்போதைய மேயர் தொடர்ந்தும் பதவியிலிருக்கக்கூடியதாக இருப்பார். ஆனால் கமிஷனர் தன்னுடைய அதிகாரத்தைக் கொண்டு ஒரு புதிய மேயரைத் தெரிவுசெய்யக்கூடும் இதனால் இச்சபைக்கு இரண்டு மேயர்கள் இருக்கக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டுத் தேவையற்ற கலவரத்தை உண்டுபண்ணி சபையின் நிர்வாகத்தை சீர்குலைக்கக்கூடிய நிலைமை ஏற்படலாம் ஆகவே இச்சீர்கெட்ட நிலையை ஏற்படவிடாது தடுப்பதற்கும் இத்தடை உத்தரவு உதவக்கூடியதாவிருக்கும்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை என்ற எமது நிலையை எடுத்துக்காட்டும்போது, ஸ்தலஸ்தாபன தேர்தல் திருத்தச்சட்டப்படி 1-ம் வட்டார அங்கத்தவர் திரு. ஏ. ஜி. ராஜசூரியர் தற்பொழுது மாநகரசபை அங்கத்தவராக இருக்கமுடியாது. தேர்தல் திருத்தச் சட்டம் அமுலில் இருத்துவருவது ஒன்றே இவரின் அங்கத்தவர் பதவியை நீக்கிவிடுகிறது. ஏனெனில் இம்மாநகரசபைக்கு ஒரு அங்கத்தவராகத் தெரிவுசெய்யப்பட்டபோது அவர் (ஏ. ஜி. ராஜசூரியர்) புலோற்பளை கிராமசபையின் அங்கத்தவராக இருந்திருக்கின்றார். இது அரசாங்கவர்த்தமானி மூலம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இவர் மாநகரசபை அங்கத்தவராக சட்டபூர்வமான முறையில் தெரிவு செய்யப்படவில்லை என்பது நீதிமன்றம் மூலம் பிரகடனப்படுத்தவேண்டிய தேவை. ஸ்தலஸ்தாபன தேர்தல் சட்டம்

(தொடர்ச்சி பார்க்க)

பாதிக்கப்பட்ட மீனவருக்கு புனர்வாழ்வு

மயிலிட்டி சந்தைக் காணியில் கைத்தொழிற் கலாசாலை

காங்கேசன்துறை பட்டினசபை தீர்மானம்

மாவிட்டபுரம், திங்

சூறுவளியினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குப் புனர்வாழ்வளிக்கும் வகையில் மயிலிட்டியில் நிறுவப்படவிருக்கும் கைத்தொழிற் கலாசாலையின் கட்டிடத்தை அமைப்பதற்கு மயிலிட்டி சந்தைக் காணியில் 5400 அடி விஸ்தீரணமுள்ள காணியை வழங்குவதெனக் காங்கேசன்துறை பட்டினசபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

பட்டடின சபையின் மாதாந்தக் கூட்டம் திரு ஆ. வ. சதாசிவம் தலைமையில் நடைபெற்றபோது மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

மின்சார இலாகாவுக்கு யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு நிறுவனத்திலிருந்து முன்னாள் தலைவர் திரு. எம். திடவீரசிங்கம் மின்சார உபகரணங்கள் வாங்கிய வகையால் கொடுக்கவேண்டிய பணத்தை அவர் ஒப்பந்தம்செய்துகொண்ட கம்பெனியிடமிருந்து பொருள் வாங்காததாலும் மின்சார உத்தியோகத்தர்கள்சென்று வாங்காமையாலும் தலைவர் செலவுக்கு மேலதிகமாக அத்தொகை இருப்பதனால் அதனை வழங்குவதில்லையென்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது,

சபையின் ஆலோசகரான வழக்கறிஞர் திரு. அ. குமரகுருவின் ராஜினாமா அங்கீகரிக்கப்பட்டு ஆலோசகராக வழக்கறிஞர் திரு. சி பாலசிங்கம் தெரிவுசெய்யப்பட்டார்.

சபையின் மின்சார இலாகாவுக்கு மூன்று தொழிலாளரை நியமனம்செய்வது; மயிலிட்டி கிராமசபையின் 14, 15ம் வட்டாரங்களைப் பட்டினசபையுடன் சேர்ப்பது பற்றி மயிலிட்டி கிராம சபைத் தலைவரின் விருப்பத்தை அறிந்து நடவடிக்கை மேற்கொள்ளல்; யாழ்ப்பாணத்திலிருந்து தெல்லிப்பழை வரும் பஸ்களைக் காங்கேசன்துறை வரையும் சேவைக்கு விடும்படியும் காங்கேசன்துறையிலிருந்துசுன்னாகத்திற்கூடாக பாடசாலைச் சேவை ஒன்றினை ஆரம்பிக்கும்படி இ. போ. ச. அதிகாரிகளைக் கோருவதென்றும்; சபையில் மேலதிகமாக உள்ள 76,000 ரூபாவை அதிக வட்டி தரும் வங்கியில் போடுவதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

'ஐக்கியத்துக்காக உழைத்தவர்'

ஜே. ஆர். புகழ்ரலை

கொழும்பு, செவ்.

திரு. டி. எஸ். சேனநாயகா இன்று உயிருடனிருந்தால் அவரது புத்திரர்பற்றி மிகப் பெருமை கொண்டு தம்மிலும்பார்க்க தமதுமகன்சிறந்தவர் எனக் கூறியிருப்பார் திரு. டட்லி சகல இனமக்களுக்கிடையிலும் ஏற்படுத்தியுள்ள ஐக்கியத்தைப்பார்த்து அவர் இவ்விதம் சொல்லியிருப்பார்'' என்று தமிழரசுக்கட்சித்தலைவர் டாக்டர் ஈ.எம்.வி. நாகநாதன் கூறினார்.

பதில் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா பேசுகையில் கூறியதாவது:

திரு. சேனநாயக்கா ஒரு தீவிர அரசியல்வாதியல்ல. ஆனால் ஒரு மாபெரும் வீரர். சகல சமூக சமயங்களின் வீரர் அவர்.

திரு. சேனநாயக்கா இலங்கையின் அரசியல் சுதந்திரத்துக்காகவும் ஜனநாயகத்திற்காகவும் விவசாயத்திற்காகவும் உழைத்து அதில் வெற்றியும்பெற்றார். அவர் தேசிய ஐக்கியத்திற்காக உழைத்தார். அந்த உழைப்பின் பலன் இப்போது கைகூடிவிட்டது.

கைதானவர்களில் 25 பேர் விடுதலை

யாழ்ப்பாணம் புதன்

சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களென்று சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்த 108 பேரில் விசாரணையின்பின் 25 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது,

கச்சைதீவிலிருந்து வந்துகொண்டிருந்த நூற்றுக்கு மேலானவர்கள் நேற்முன்தினம் பொலிசரால் சட்டவிரோதக் குடியேற்றக்காரர் என்று சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டனர் இவர்களில் 35 பேர் தாம் சட்டவிரோதக் குடியேற்றக்காரர் அல்ல என்பதை தகுந்த அத்தாட்சி காட்டி நிரூபித்து விட்டதால் விடுதலை செய்யப்பட்டு விட்டதாகவும்மீதியுள்ள 83 பேர் சம்பந்தமாக தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருவதாவும் தெரிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூட பக்தியை விட்டு விட்டு ஸ்ரீ கிருஷ்ணன், ராமன் விஷ்ணு, தேவி இவர்களெல்லாரையும் சமமாக நினைத்து பக்திசெய்யவேண்டும். எல்லா ஆலயங்களுக்கும் கிறிஸ்தவர், முஸ்லிம்கள் உட்பட எல்லோரும் சென்றால்தான் சிவபெருமானிடம் உண்மையான பக்தியை வளர்க்க முடியும்.

— சுவாமி சிவானந்தர்

ஈழநாடு

EELA NADU National Tamil Daily Post Box 41, Jaffna
Telegrams: EELA NADU Jaffna Phone 2

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு பங்குனி மீ 10 உ (23-3-66)

அங்கொடை அநியாயம்

அங்கொடையில் உள்ள மனநோய் வைத்திய சாலையிலே பெண் நோயாளருக்குச் செய்யப்படும் அநியாயங்கள் பற்றி விசாரணைசபை முன்பாக ஆஸ்பத்திரிக் குழுவினர் அளித்துள்ள சாட்சியம், அங்கு நிலைமை எவ்வளவு மோசமாக இருப்பதென்பதையும், சீக்கிரத்தில் தக்கசீர்திருத்தங்களை செய்யவேண்டுமென்பதையும் அறிவுறுத்துகின்றது.

பெண்நோயாளரை ஆண் நர்சுகள் ஏமாற்றிக் கெடுப்பதாயும், நோயாளரை ஆஸ்பத்திரி அட்டெண்டர்களும் சிப்பந்திகளும் மிருகத்தனமாக நடத்துவதாயும் அக்குழுவினர் தெரிவித்துள்ளது கவலை அளிக்கக்கூடியதாகும். மனநோய் வருவதற்கே முக்கிய காரணம் அன்பற்ற சூழ்நிலைதான். நல்ல சூழ்நிலையில் அன்பு காட்டினால், மனநோய் வெகுவாக குணமடைவதைப் பார்க்கிறோம். மருந்துகளால் ஓரளவு நல்ல பலன் உண்டென்பது உண்மை. ஆனால் மருந்தை விட அன்பான சூழ்நிலைதான் மனநோய் சிகிச்சைக்கு முக்கியமாகும். ஆனால் அங்கொடை ஆஸ்பத்திரி குழுவினர் கூறியுள்ளதைப் பார்த்தால், ஓரளவு புத்திசுவாதீன மற்றவர்களும் அங்கு சிறிது காலமிருந்தால், அவர்களுக்கு நோய் அதிகரித்து மீளவே முடியாது போய்விடும் போல் தெரிகிறது. எந்தநோக்கத்துடன் இந்த ஆஸ்பத்திரி அமைக்கப்பட்டதோ அதற்கு நேர்மாறாகக்காரியங்கள் நடப்பது விபரீதமும் சகிக்க முடியாததுமாகும்.

அங்குள்ள நோயாளருக்குச் செய்யும் பெரும் பாவம் அவ்வப்போது அம்பலமாகியுள்ளது. ஆனால் இந்நிலைமேம்பட்டதாகத் தெரியவில்லை. அந்தஆஸ்பத்திரியில் நோயாளர் எண்ணிக்கை பலமடங்கு அதிகரித்துள்ளதால், நிலைமை சமாளிக்க முடியாதிருப்பதாயும், நோயாளரின் சங்கடங்களுக்குஇது முக்கியமானதோர் காரணமென்றும் சொல்லப்படுகின்றது. மனநோய் தீவெங்கும் பரவலாக இருப்பதால், ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒரு மனநோய் ஆஸ்பத்திரியை சிறிதளவிலாவது அமைப்பது பலவிதங்களிலும் விரும்பத்தக்கது. இதனால் நோயாளர் தங்கள் சொந்தப்பகுதியிலேயே இருந்து சிகிச்சை பெறமுடிவதுடன், அங்கொடை ஆஸ்பத்திரிசனநெருக்கமும் குறைந்து அங்கு நிலைமை சீர்படக் கூடும். விசாரணை சபைத் தலைவரும் இந்த யோசனையை ஆதரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

நோயாளர்கூறும் புகார்களைக்கேட்டு அவற்றின் மீது தக்க நடவடிக்கை எடுக்கவும், கட்டடங்களை சரிவர பராமரிக்கவும், நோயாளரை விடுதலைசெய்யவும், அவர்களுக்கான பணம்சரிவரசெலவு செய்யப்படுகின்றதாஎன்பதை கவனிக்கவும், ஆஸ்பத்திரி கமிட்டியினருக்கு விரிந்த அதிகாரம் சட்டப்படி இருக்கின்றது. ஆனால்தங்களுக்கு இவ்வளவு அதிகாரமிருப்பதே அக்கமிட்டியினருக்குத் தெரியாதாம்! இந்த அறியாமையால், இவர்கள் தங்கள் பொறுப்பை நிறைவேற்ற முடியாமலும் இதனால் நோயாளர் சங்கடம் அதிகரிக்கவும் காரணமாக இருந்துள்ளது. கமிட்டிக்கு நியமிக்கப்படும் மெம்பர்கள் தங்கள் பொறுப்பை அறியாமலிருப்பதாயின், நிலைமை மோசமாக இருப்பதில் வியப்பில்லை. இனியாவது இந்த நியமன விஷயத்தில் அதிக பொறுப்பும் அக்கறையுமுள்ள அனுபவஸ்தர்களையும் நியமிக்க வேண்டும்.

இவ்விஷயத்தில் இனி சற்றும் சுணக்கம் செய்யப்படாது. ஒவ்வொரு நாள் தவக்கமும், அங்குள்ள துரதிருஷ்ட சாலிகளான நோயாளருக்கும் சிறப்பாகப் பெண்களுக்கும் பெரும்பாவம் செய்வதாகும். பெண்களுக்காகத் தனி ஆஸ்பத்திரி அல்லது ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்தி, பெண் வைத்தியர்களையும் பெண் நர்சுமார்களையும் நியமிக்க முடியாதா? அப்படிச்செய்வதுதான் அவர்களது பாதுகாப்புக்கு பலவிதங்களிலும் உகந்தது.

பெரியவர் யோசனை

மணம்செய்ய விருக்கும் வாலிபர்களுக்கு காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் நல்லதோர் முக்கிய யோசனையைக் கூறியிருக்கின்றார். தம்துணைவியைத் தெரிவுசெய்வதில் பெற்றோர்களின் யோசனையையும் விருப்பத்தையும் புதல்வர்கள் மதித்து நடப்பது அவர்களது கடமையென்றும், ஆனால் சீதனம் அல்லது வரதட்சணையை அவரது குடும்பத்தார் கேட்பதாயின் அவர் மணம்செய்ய மறுத்துவிடவேண்டும் என்றும்உபதேசித்திருக்கிறார்.

இப்பெரியவரது யோசனை நம் இலங்கையிலே மணம்செய்யவிருக்கும் வாலிபர்களுக்கும் மிகவும் பொருந்தும்.

தமிழகத்திலுள்ள வரதட்சணைக்கும், ஈழத்தில் உள்ள சீதனப் பழக்கத்திற்கும் சில முக்கிய வேற்றுமைகள் உண்டு தான் என்றாலும் இந்தப் பழக்கங்கள் விவாகத்தின் புனிதத்தையே கெடுப்பதுடன் சமூகத்திலே பெண்களின் மதிப்பையே குறைத்து, பெண்களைப் பெற்றவர்களுக்கு விவாகவிஷயமாகப் பெரும் கவலைகளை அளிக்கின்றது.

தமிழ்ப் பண்புக்கு மிக மாறான இந்த துர்ப்பழக்கம் எப்படித்தான் நம் சமூகத்தில் புகுந்ததோ தெரியவில்லை. இந்தக் கூடாத பழக்கத்தை ஒழிக்க காஞ்சிப் பெரியவாளின் யோசனையின்படி படித்த நம் வாலிபர்களும் பெண்மணிகளும் உறுதிகொண்டு எல்லா முயற்சிகளையும் செய்ய வேண்டியது சமூக முன்னேற்றத்துக்கு மிகவும் அவசியமாகும்.

ஆசிரியருக்கு கடிதங்கள்

ஆங்கிலத்தின் அவசியத்தை நாம் உணரவேண்டும்

சமய வழிபாட்டுக்கு, சமஸ்கிருதம், பாளி, அராபி, லத்தீன் எவ்வாறு உதவுகிறதோ அதேபோல் உலக மகா சமுதாயத்துடன் தொடர்புகொள்ளவும் அரசியல் நிர்வாகத்தை தொடர்ந்து நடத்தவும் உதவும் மொழி ஆங்கிலம். எனவே நாம் ஆங்கிலத்தை நமது அரசியல் நிர்வாக மொழியாக உபயோகிக்காமல்விட்டால் எமது எதிர்காலம் பின்நோக்கிச் சென்றுவிடும்.

யாருக்கும் அடிமைப்படாமல் சுதந்திர உரிமையாக நாம் பெற்றுள்ள ஆங்கிலத்தை எதற்காக அகற்ற வேண்டும்? ஆங்கிலத்தை வைத்துக்கொண்டிருப்பதற்கு நாம் வரிசெலுத்துகிறோமோ? ஆங்கிலத்துக்கு உலகத்தில் மதிப்பில்லாமல் போய் அதற்காக அம்மொழியை அகற்றவேண்டுமா? சரித்திர பூர்வமான காரணத்தினால் ஆங்கிலம் தான் ராஜ்யங்களுக்கிடையே மிகச் சிறந்த தொடர்புமொழியாய் இருக்கும். ஆங்கிலத்துக்கும் சுதந்திரஅந்தஸ்துக்கும் எந்தவித தொடர்பு மில்லை. ஆனபடியால் இந்த ஆங்கில அறிவின் நல்விளைவைச் சொற்பகாலச் சுயநல ஆசையால் அதனுடைய பெருமையான அந்தஸ்திலிருந்து அகற்றினால் ஒற்றுமையற்ற பழங்காலச் சரித்திரத்துக்கு நாடு திரும்பிவிடும்.

நமக்கு ஐக்கியம் தந்தது ஆங்கிலம், அரசியல்அறிவை தந்த ஆங்கிலம், முன்னேற்றம்தந்தது ஆங்கிலமென்பதைநாம் நினைவில்கொள்ள வேண்டும்.

பொ. அப்புத்துரை
(ஐக்கிய மலாயன் பென்ஷனர்)
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

ஃ ஃ ஃ

ஆன்மசாந்தி கிரியைகள

இறந்தவர்களின் ஆன்ம சாந்திக்காகச் செய்யப்படும் கிரியைகளைக் கிரிமலையில் ஒப்பந்தமாய்க் கொடுத்து ஒருகுருக்களிடம் பலபேரும் ஒரே கிரியைமுகத்தில் மாறி மாறி அவசரப்பட்டு பயபக்தியில்லாது செய்யப்படுங் கிருத்தியத்துக்கு பலன் வராது.

இதனால், கிரியைகளைச் செய்யவிரும்புவோர் தாமே பொருட்களைத் தேடி ஒரு குருக்களை அமர்த்திக் கிரியைகளை ஆறுதலாக, பயபக்தியாய் தூய்மையான இடத்திலும் சுற்றுடலிலும் செய்வித்தல் மிக்கநல்லதாக விருக்கும்.

மு. கு. சுப்பிரமணியம்
'தாயுமானவர் இல்லம்'
காரைதகர்.

தமிழ் காவலன் குணசேகரம்

1956-ம் ஆண்டு தனிச்சிங்கள மசோதா பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்ட நாள் தொடக்கம் 1964-ம் ஆண்டு தாம் இறக்கும்வரை தமிழுக்காகவும் தமிழரின் உரிமைகளுக்காகவும் போராடி ஆங்கில, தமிழ் பத்திரிகைகளில் தமது ஆணித்தரமான கருத்துக்களை வெளியிட்டு வகுப்புவாத வெறியர்களுக்குச் சாட்டையடிகொடுத்த திரு. எஸ். ஜே. குணசேகரத்தின் பிறந்ததினம்மார்ச் மாதம் 21-ந் திகதியாகும்.

யாழ்ப்பாணம் பரி.யோவான் கல்லூரியில் ஆசிரிய

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் கலத்தொடர்ச்சி)

அறிந்த ஓர் அமெரிக்கவாலிபர், திருப்பனந்தாள் ஆதீனத்துக்கு எழுதி தாம் சைவராக விரும்புவதாகத் தெரிவித்திருந்தார். இவ்வந்த மதமாற்றங்களை மதுரை திருஞானசம்பந்த ஆதீன கர்த்தரே செய்துவருவதால், அவரிடம் திருப்பனந்தாள் ஆதீனத்தார் இதை அனுப்பிவைத்தனர்.

இதுசம்பந்தமான கடிதப் போக்குவரத்துகளைப் பார்த்தேன். சைவத்திலே அந்த அமெரிக்கருக்கு எவ்வளவு ஆர்வம்! விபூதி, ருத்திராட்சம் எல்லாம் முன்கூட்டியே விமானமூலம் பார்சலில் அனுப்பப்பட்டன. இதற்காகவும், குருதட்சிணைக்காகவும் (கேட்காமலே) அவர் முன்பணம் அனுப்பி இருந்தார். ஒரு குறித்த நன்னாளைத் தெரிவுசெய்து, மதுரை மடத்தில் விசேஷ பூசை நடத்தி, அதே சமயத்தில், அமெரிக்காவிலிருந்து அவர் திட்சை எடுத்து, சைவரான கதை வெகு புதுமையாகவும் ருசிகரமாகவும் இருந்தது. இதுவரை சுமார் 3000பேர் பிறசமயங்களிலிருந்து தாங்களாகஇஷ்டப்பட்டு சைவர்களாகியுள்ள விபரங்களையும், இதற்கான காரணங்களை விளக்கி அவர்கள் எழுதியுள்ள கடிதங்களையும் பெரிய பயிலில்வைத்துள்ளனர். இதுவரை இந்து சமயத்திலிருந்துதான் பலவேறு காரணங்களால் பிறசமயங்களுக்கு மக்கள் மதம் மாறி வந்தனர். அவர்கள் மீண்டும் சைவர்களாக விரும்பினாலும், அதற்கு அதிகார பூர்வமான வாய்ப்பு இல்லாமலிருந்தது. சைவசமய குருவான திருஞானசம்பந்தரின் பாதமலர் தலைக்கொண்டு விரும்புபவர்களை மீண்டும் சைவத்தில் சேர்த்துக்கொள்ளும் பணியை மதுரை ஆதீனம்செய்துவருகிறது. இப்புது முயற்சிக்கு காஞ்சி ஸ்ரீ சங்கராச்சாரியார் முதலிய பெரியோர்களின் ஆதரவும்இருப்பதையும்தாங்களாக விரும்புகிறவர்களுக்கு சைவத்தின் மூடப்பட்ட கதவுகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளதையும் காணக்கூடியதாகஇருந்தது.

ஃ ஃ ஃ

குற்றம் நீ குணங்கள் நீ
கூடல் ஆலவாயிலாய், சுற்றம் நீ பிரானும் நீ தொடர்ந்திலங்கு சோதி நீ, கற்ற நூல் கருத்தும் நீ அருத்தமின்பமென்றிவை, முற்றும் நீ புகழ்ந்து முன்னுரைப்பதன் முகம்மனே.

— திருஞானசம்பந்த சுவாமிகள்

ஐயாறன் எழுதுகிறான்

திருச்சியிலிருந்து ரயிலிலே மதுரை செல்ல சுமார் 5 மணிநேரமாகின்றது. ஆனால் ஸ்டேட் எக்ஸ்பிரஸ் பஸ்ஸில் சென்றால் 3 மணி நேரம்தான். கட்டணம் சற்றே அதிகம். மேலும் பஸ்ஸிலே பின் ஆசனத்தில் இருந்தால், தூக்கித் தூக்கிப் போட்டு, உடம்பெல்லாம் நோவுமெடுக்கின்றது. ஸ்டேட் பஸ் நிலையத்திலே வந்து இரவிலே தங்கி, அதிகாலை 5 மணிக்கு மதுரைக்கு பஸ்ஸில் புறப்பட்டேன். 8 மணிக்கு வெயிலில் அடிபடாமல் ஆலவாய் வந்து சேர்ந்துவிட்டது; இந்த பஸ்.

மதுரையிலே புதிய சர்வகலாசாலைக்கு பேராசிரியர் மீனாட்சி சுந்தரனார் உபவேந்தராக நியமனம் பெற்றுள்ளாரல்லவா? அவரை நேரில் பார்த்து, ஈழத்தின் வாழ்த்துக்களையும், பாராட்டுதலையும் தெரிவிக்கவேண்டுமென்று ஆவலுடன் சென்றேன். மதுரைக்கு சுமார் 6 மைல் தூரத்திலுள்ள திருநகரில் தான் அவரது வாசஸ்தலமுள்ளது. திருப்பரங்குன்றத்தைத் தாண்டித்தான் அங்கு செல்லவேண்டும். அங்கு சென்ற சமயம் துரதிருஷ்டவசமாக மீனாட்சி சுந்தரனார் வெளியூர் சென்றுவிட்டதை அறிய ஏமாற்றமாக இருந்தது. அவருக்கு இப்போது சற்றும் ஓய்ச்சல் கிடையாது. பல பல ஊர்களிலிருந்தும் பேச அழைப்பு வருகிறது. ஆகவே நம் ஈழத்து மாணவர்களுக்கு அவர் அண்ணாமலையிலே செய்த உதவிகளைப் போல் மதுரையிலும் செய்வாரென்று நன்றுடன் நம்புவதாகக்கூறி, ஈழத்தின் சார்பாக வாழ்த்தைத்தெரிவித்து ஒருகடிதம் எழுதி அவரிடம் சேர்த்துவிடுமாறு செய்து திரும்பினேன்.

மதுரை பல்கலைக்கழகம் என்பது எப்படித்தெரியுமா? பேராதனையைப்போல், மாணவர்கள் அங்கு வசித்துப் படிப்பது அல்ல. தமிழகத்திலே பல ஊர்களிலுமுள்ள கல்லூரிகளிலும் பி. ஏ; எம். ஏ. வகுப்புகள் நடத்தப்படுகின்றன. அக்கல்லூரிகளில் ஆங்காங்கே இருந்து வசதியாக மாணவ மாணவிகள் உயர்கல்வி பயிலுகின்றார்கள். இக்கல்லூரிகளில் பலவற்றை, மதுரை சர்வகலாசாலையுடன் இணைத்திருக்கிறார்கள். இக்கல்லூரிகள்சென்னை பல்கலைக்கழகத்துடன் இதுவரை இணைக்கப்பட்டிருந்தன. இனி அவை மதுரையுடன் இணையும். திருச்சியிலுள்ள கல்லூரிகளில் சிலவும் இதில் சேர்ந்துள்ளதாகக் கேள்விப்பட்டேன். இந்த முறையினால், மதுரையிலே சர்வகலாசாலைக்காகப் பெரியகட்டடங்கள் அமைக்கப்படவில்லை. காரியாலயத்துக்காகமட்டும் ஒரு கட்டடம் அமைக்கப்பட்டுவருகின்றது.

இதே போன்ற ஏற்பாட்டை ஈழத்திலும் செய்வதாயின், நமது சர்வகலாசாலைப்பிரச்னைகளில் பலவும் நீங்கும். ஆங்காங்கே மாணவ, மாணவிகள் இருந்து வசதியாகப் படிக்க முடிவதாகும். ஏன் இப்படிச் செய்ய மறுக்கிறார்களோ தெரியவில்லை!

ஃ ஃ ஃ

தபால்மூலம் ஓர் அமெரிக்க வெள்ளையர் சைவராகியுள்ள அதிசயத்தை மதுரை ஆதீனத்தில் கேள்விப்பட்டேன். சைவத்தின் மாண்பினை நூல்கள் மூலமும், அறிஞர்கள் மூலமும்

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சாப்ராஜ்யம் திருத்தி அமைக்கும் யோசனை

கொள்கையளவில் அரசாங்கம் ஏற்றிருப்பதாக நந்தா அறிவிப்பு

அரசாங்கத்தின்முடிவுக்குகட்சித்தலைவர்கள்வரவேற்பு

புதுடில்லி, மார்ச் 22

பஞ்சாப் ராஜ்யத்தை மொழி அடிப்படையில் திருத்தி அமைக்கவேண்டுமென்ற யோசனையை அரசாங்கம் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டிருக்கிறதென்று உள்துறை மந்திரி திரு. குல்ஸாரிலால் நந்தா நேற்று லோகசபையில் அறிவித்தார்.

அரசாங்கத்தின் அறிவிப்பை பொதுவாக பல அரசியல் கட்சித் தலைவர்களும் வரவேற்றிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

பஞ்சாபி சுபா குறித்து இந்திய அரசாங்கத்தின் கொள்கையை திரு. குல்ஸாரிலால் நந்தா நேற்று லோக சபையில் வெளியிட்டபொழுது சபையில் பெரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்யப்பட்டது.

சிறுபான்மையினருக்கு முழுப்பாதுகாப்பு

மொழி அடிப்படையில் பஞ்சாப் ராஜ்யத்தைத் திருத்தி அமைப்பது பற்றி திரு. நந்தா குறிப்பிடுகையில், அங்குள்ள சிறுபான்மை மக்கள் எந்த விதத்திலும் பாதிக்கப்படமாட்டார்கள் என்றும் புதிய அமைப்பின் கீழ் அவர்களுக்கு சகல பாதுகாப்புக்களும் அளிக்கப்பட்டிருக்கும் என்றும் உறுதி தெரிவித்தார்.

மொழி அடிப்படையில் திருத்தி அமைக்கப்படும் பொழுது, இன வேற்றுமைகளுக்கு அங்கு இடமிருக்காதென்றும் சமூக ஒற்றுமைக்கே முதலிடம் அளிக்கப்படுமென்றும் திரு நந்தா நம்பிக்கை தெரிவித்தார்.

"மூன்மாதிரியாக திகழவேண்டும்"

முதன் மந்திரி திரு. ராம் கிஷன் நேற்று சண்டிகார் ராஜ்ய சட்டசபையில் உரை நிகழ்த்துகையில், எதிர்க் கட்சியினரோ அல்லது மற்றவர்களோ பரஸ்பரக்குற்றச்சாட்டுக்களில் ஈடுபடாமல் ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்து, புதிய ராஜ்யத்தின் அபிவிருத்தியில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

பலரும் வரவேற்பு

இந்திய அரசாங்கத்தின் முடிவை பொதுவாக பல தலைவர்களும் வரவேற்றுள்ளனர்.

தாராசிங் அகாலி கோஷ்டியினர், ஜன சங்கத்தலைவர். கம்யூனிஸ்ட்தலைவர்கள் உட்பட பலரும் வரவேற்றிருக்கின்றனர்.

சன்பத்தேசிங் கருத்தெதுவும் வெளியிடமறுத்துவிட்டார். பஞ்சாபி சுபா பற்றிய அரசாங்கத்தின் கொள்கையைத் தாம் பூரணமாக படிக்காதவரை அதுபற்றி எதுவும் கூறமுடியாது என்று அவர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்.

மாஸ்டர் தாராசிங்கை மேலும் காவலில் வைப்பதில் அர்த்தமில்லை என்றும் அவரை விடுதலை செய்ய வேண்டுமென்றும்சன்பத்தேசிங் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜாகர்த்தாவில் கடுமையான பந்தோபஸ்து நடவடிக்கைகள்

ஜாகர்த்தா, மார்ச் 22

இந்தோனேஷியத் தலைநகர் ஜாகர்த்தாவில் கடுமையான பந்தோபஸ்து நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

செய்தித் தணிக்கைகள் இங்கு பூரணமாக அமுல் செய்யப் பட்டிருப்பதுடன் ஜாகர்த்தாவிலிருந்துசெய்திகளெதுவும்வெளியேபோகாவண்ணம் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

காவலில் வைக்கப்பட்ட முன்னாள் இந்தோனேஷிய மந்திரிகள் சிலர் தப்பி ஓடியதைத் தொடர்ந்து விமான நிலையங்களில் பலமான பாதுகாப்புகளும் செய்யப்பட்டிருக்கின்றன. விமானங்கள் எல்லாம் தரையில் தான் இருக்கவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தப்பி ஓடிய முன்னாள் மந்திரிகள் விமானங்களில் வேறு நாட்டுக்குச் செல்லலாமென்று கருதப்பட்டதை தொடர்ந்தே புதிய நடவடிக்கைகள் கைக்கொள்ளப்பட்டன.

---

200 வியட்காங்கியர் மாண்டனர்

தெ. வியட்னமில் கடும் சண்டை

சைகோன், மார்ச் 22

தென்வியட்னமில் அமெரிக்க மாலுமித் துருப்புக்களுக்கும் வியட்காங்கியருக்குமிடையே கடுமையான சண்டை நடைபெற்றுவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்வியட்னமின் மத்தியபகுதிக் கரையோரப் பகுதிகளில் நிகழ்ந்த சண்டையில் 200 வியட்காங்கியர் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் தென் வியட்னமின் மற்றுமொரு பகுதியில் வியட்காங்கியருக்கும் அரசாங்கத் துருப்புக்களுக்குமிடையே கடுமையான சண்டை நடைபெறுவதாகச் செய்திகள் கூறுகின்றன. இந்தச் சண்டையின் போது ஐந்து அமெரிக்க விமானங்கள் நாசமாக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

வடக்கு வியட்னமில் அமெரிக்க விமானங்கள் நேற்று நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதல்களின் போது பரவலான சேதம் ஏற்பட்டுள்ளது.

நாகலந்து தலைநகரில் கலகக்காரர்கள் முகாம்!

ஷில்லாங், மார்ச் 22

நாகா கலகக்காரர்கள் தங்களது அரசியல் நடவடிக்கைகளை நாகலந்து தலைநகர் கோஹிமாவுக்கு மாற்றுவதற்கு துணிச்சலுடன் முயற்சித்து வருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

கடந்த சில தினங்களாக கோஷிமாவில் கலகக்காரர்கள் பெருமளவில் குழுமி வருகின்றனர் என்றும் இங்கு இம்மாதத்தில் தங்களது "குடியரசு" தினத்தைக் கொண்டாடப்போவதாக அறிவித்திருக்கின்றனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனைத் தொடர்ந்து கலகக்காரர்களின் பார்லிமெண்ட் பட்ஜட் கூட்டத் தொடர் நடைபெறுமாம்!

நகரின்ஒருபகுதியில் அவர்கள் கூடாரங்கள் அமைத்து பிரமாண்டமான முகாமொன்றை எழுப்பியுள்ளனர்.

இதற்கிடையில், மூன்று நாட்களுக்குள் வெளியேறு விடில் போர் ஒய்வு உடன்பாட்டை மீறியதற்காகக் கடுமையாகத்தண்டிக்கப்படுவார்கள் என்று கலகக்காரர்களுக்கு அரசாங்கம் எச்சரிக்கை செய்துள்ளது.

விண்வெளியில் 2 வான்வெளிக் கப்பல்கள்

மே. ஜேர்மனி ஆராய்ச்சி நிலையம் வெளியிட்ட தகவல்

மாஸ்கோ, மார்ச்22

சோவியத்யூனியன்நேற்று "காஸ்மொஸ்-113" என்ற செய்மதியை வான்வெளிக்கு அனுப்பிவைத்துள்ளது.

இந்தச்செயற்கைக் கிரகம் விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்காக அனுப்பிவைக்கப்பட்டதென்றும் இது பூமியைச் சுற்றி வருகின்றதென்றும் சோவியத் செய்தி ஸ்தாபனமான 'டாஸ்' அறிவித்துள்ளது.

இதற்கிடையே மேற்கு ஜேர்மனி ஆராய்ச்சி நிலையமொன்றிலிருந்து வெளியான செய்தி வேறுவிதமாக இருக்கிறது.

ரஷ்யா இரண்டு விண்வெளிக்கப்பல்களை வான வெளிக்கு அனுப்பிவைத்திருக்கிறதென்றும் இவை இரண்டும்அருகருகேசென்று கொண்டிருக்கின்றன என்றும் இந்த ஆராய்ச்சி நிலையம் அறிவித்துள்ளது.

விண்வெளியில் இரண்டு கப்பல்களையும் சந்திக்க வைப்பது ரஷ்யாவின் ஒரு திட்டமென்றும் இக்கப்பல்களை மனிதர் இயக்கலாம் என்றும் இந்தநிலையம் அறிவிக்கிறது.

இந்திய சர்வோதய தலைவர்கள் இலங்கை வருவார்கள்

வினோபாவின் பிரதிநிதியும் வருவார்

கொழும்பு, செவ்.

காந்தியத் தத்துவங்களிலும் சர்வதேச இயக்கத்திலும் இந்தியாவில் பிரசித்தி பெற்ற அநேகர் ஏப்ரல் மாதம் யாழ்ப்பாணம் வரஇருக்கிறார்கள்.

லோக்சபை உறுப்பினர் திரு. ஆர். ஆர். திவாகர் காந்தி நினைவுநிதிச் செயலாளர் திரு. தேவேந்திரகுமார் குப்தா, காந்திஇயக்க பத்திரிகையாசிரியர் திரு. எம். மகாதேவன், காந்திசேனையைச் சேர்ந்தவரான செல்வி நிர்மலாதேவி பந்த், தமிழ்நாடு சர்வோதயமண்டல்திரு ஸ் ஆர். சுப்பிரமணியம் ஆகியவர்கள்இங்கு வருபவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

இலங்கையிலுள்ள காந்திய சங்கம், சிரமதானஇயக்கம் ஆகியவைகளின் அழைப்பின் பேரிலேயே இவர்கள் இங்கு வரவிருக்கிறார்கள். இவர்கள் நாட்டின் பல இடங்களிலும் பிரசங்கங்களையும், சிரமதான இயக்கப் பயிற்சி முகாம்களையும் நடத்துவார்கள்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் வடமேல் மாகாணத்தில் உள்ள குளியாப்பிட்டியில் 25, 26, 27 ம் திகதிகளில் இவர்கள் சிரமதான பயிற்சி முகாம்களை நடத்துவார்கள் என்றும் இதுபோலவே மே மாதம் 1, 2, 3ம் திகதிகளில் கிளிநொச்சிப் பகுதியிலுள்ள உருத்திரபுரத்தில் சிரமதானமுகாம் நடைபெறும் என்றும் தெரிகின்றது.

யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் நடைபெறவிருக்கும் பல கூட்டங்களிலும் இப்பிரமுகர்கள்கலந்து கொண்டுசொற்பொழிவுகள் செய்வார்கள்.

தமிழ்நாட்டில் முதன் முதல் சிரமதானம் பெற்றவரும் வினோபாஜியின் பிரதிநிதியுமான நிர்மலா தேஷ்பாண்டேயும்இங்குவரஇருப்பது குறிப்பிடப்படவேண்டியதாகும்.

---

80 பேர் மாண்டனர்

கம்பாலா, மார்ச் 22

மேற்கு உகண்டாவில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியினால் 80 பேர் மாண்டனர் என்றும் சுமார் 100 பேர் காயமடைந்தனரென்றும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மீட்பு வேலைகள் ஹெலிகாப்டரின் உதவியுடன் நடைபெறுகிறது.

ரஷ்ய அணுசோதனை

வாஷிங்டன், மார்ச் 22

ரஷ்யா அணுசோதனை ஒன்றைநடத்தியதாக அமெரிக்கப் பதிவுநிலையம் கூறியது. 10 லட்சம் டி. என். டி. சக்திகொண்ட நிலத்தடிசோதனை இதுவெனக் கூறப்படுகிறது.

1274 தொழிலாளர் வேலைநீக்கம்

பம்பாய், மார்ச் 22

வேலைநிறுத்தம் செய்த 1274 ஏர் இந்தியத் தொழிலாளர்களுக்கு வேலைநீக்க உத்தரவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இவர்களின் வேலைநிறுத்தத்தினால்விமானசேவைகள் பெருமளவு பாதிக்கப்பட்டனவென்றும் எச்சரிக்கை செய்யப்பட்டும் இவர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனரென்றும் ஏர் இந்திய நிர்வாக அதிகாரியொருவர் கூறினார்.

பெற்றார்த்தனவிழா

யாழ்ப்பாணம், புதன்

காங்கேசன்துறை அமெரிக்கமிஷன் ஆங்கில பாடசாலைப் பெற்றார்தினவிழா அப்பாடசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. இலங்கைப் பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் திரு. கு. நேசையா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்

கொம்பு முளைத்த மனிதன்!

புதுடில்லி, மார்ச் 22

ஒரு மனிதனுக்கு கொம்பு முளைத்த அதிசய சம்பவமொன்று கோலாலம்பூர் ஜில்லாவிலுள்ள மகாகயன் எனுமிடத்தில் நிகழ்ந்துள்ளது.

45 வயதுள்ள துண்டப்பர் அஜரேகர் என்ற இந்த நபர் நீண்டகாலமாக தலைமுடி வெட்டாமலிருந்தாரென்றும் கட்டாயத்தின்மீதுஅவரது தலைமுடி இறக்கப்பட்ட பொழுது அவருடைய தலையிலே கொம்பு முளைத்துக்கொண்டிருந்ததை சவரத் தொழிலாளி பார்த்து பயந்து ஓடிவிட்டதாயும் கூறப்படுகிறது. இந்தக் கொம்பு அவரது தலையின் இடதுபுறத்தில் முளைத்திருக்கிறது இக்கொம்பு இரண்டு மாத காலத்துக்கு முன்னதாக முளைக்கத் தொடங்கியதாகச் சொல்லப்படுகிறது. இப்பொழுது அவரது தலையின் வலது பக்கத்தில் ஏதோ ஒரு மாதிரியான உணர்ச்சி ஏற்பட்டு வருகிறதென்றும் மற்றோர் கொம்பு முளைப்பதற்கான அறிகுறி இதுவென்றும் சொல்லப்படுகிறது.

குறிப்பிட்ட நபர் திருமணமானவர். ஒரு மகன் உண்டு. ஆனால் கொம்பு முளைத்த கணவன் வேண்டாம் என்று கூறி மனைவியும் மகனும் அவரை விட்டுச் சென்று விட்டனர். தற்பொழுது இவர் தனது தாயாருடன் வாழ்ந்து வருகிறார்.

[illegible] முளைத்த அதிசயத்தை, மக்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று பார்த்துச் செல்கின்றனர். ஆனால் துண்டப்பா அஜரேகர் வழக்கம்போல தமது வேலைகளைக் கவனித்து வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாட்டின் பொருளாதாரத்தை மக்கள்தான் முன்னேற்றவேண்டும்"

விவசாய பொருட்காட்சி விழாவில் மன்னார் எம். பி. பேச்சு

மாங்குளம். செவ். "ஒருகாலத்தில் இப்பகுதி மக்கள் தங்கள் நெல்லை புசல் ஐம்பது சதமாக விற்றனர். ஆனால் இன்று புசல் பன்னிரண்டு ரூபாயாக விற்கப்படுகிறது. ஆனாலும் மக்களின் வாழ்க்கைத் தரத்தில்கூட உயர்ச்சியில்லை. இதன்காரணம் தங்கள் வருமானத்தை வீணானவழிகளில் விரயமாக்குவதே. இப்படியான வீண்வழிகளில் பணத்தை விரயமாக்குவதை விடுத்து பொருளாதாரத்தை முன்னேற்றும்பணியில் ஈடுபட வேண்டும்."

முருங்கன் விவசாய பொருட்காட்சி விழாவைத் திறந்துவைத்துப் பேசுகையில் திரு. ஏ, அழகக்கோன் மேற்கண்டவாறு கூறினார்.

விழாவுக்கு முருங்கன் கட்டளைக்குரவர் எஸ். ஏ. மைக்கல்சுவாமி ஓ. எம். ஐ. தலைமைவகித்தார்.

திரு. அழகக்கோன் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"பாலைத் தேவையென்று இறக்குமதி செய்யும் அரசாங்கம் பாலைத் தரக்கூடிய கால்நடைப் பண்ணைகளைக் கடந்த அரசாங்கம் மூடிவிட்டதே. இவற்றைத் திரும்பவும்இப்பகுதிக்கு வைப்பதற்கு விவசாய இலாகாவினர் கவனமெடுக்கவேண்டும்.

1964.ம் ஆண்டு மார்கழியில் வீசிய சூறாவளியினால் பலத்தசேதத்துக்குள்ளாகிய எமது பகுதி மக்களிடம் அரசாங்கத்தார் 'தண்ணீர்வரி' அறவிட உத்தேசித்திருக்கின்றனர். இது பனையால் விழுந்தவனை மாடேறிய கதையாகக் காணப்படுகின்றது. இதை நிறுத்தச் சென்றமாதத்தில் 'அலரி மாளிகையில்' நடந்த நாட்டில் அதற்கான நடவடிக்கை எடுக்கும் வண்ணம் கௌரவ நீர்ப்பாசன மந்திரியைக் கேட்டுக்கொண்டேன். இப்பகுதிவாழ் விவசாயமக்கள்தங்கள் பொருட்களைச் சந்தைக்குக் கொண்டு போவதற்கு இப்பகுதி தெருக்கள் கேவலமானதாக இருக்கிறது. பொதுவாக, வங்காலை நானாட்டான் 'விடுத்தல்தீவு' தெருக்கள் பிரயாணிகள் நடப்பதற்கே கேவலமானநிலையில் காணப்படுகின்றது. அவற்றைத் திருத்துவதற்கு என்னாலான முயற்சி செய்வேன்.

மாவட்ட விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர் எஸ். காராளசிங்கம் பேசுகையில் கூறியதாவது:—

'முசலி', 'நானாட்டான்' பகுதியில் நான்கு வருடங்களுக்குப்பிறகு கொண்டாடப்படும் ஒரு பெரியவிழா இவ்விவசாயப் பொருட்காட்சி விழாவாகும். இதை 'விவசாயிகளின்பெருவிழா', 'அறுவடைவிழா' என்றே சொல்லலாம். இவ்விழாவில் வைக்கப்பட்டிருக்கும் பொருட்களை நன்கு கவனித்தால் நெல்லைமட்டும் நாம் விளைவிப்பதோடு நில்லாமல் நாட்டில் 2/3 பங்கு லாபம் தரும் உபபயிர்களை எம்சுயதேவைக்குப் போதுமான அளவுவிளைவித்துக் கொடுக்க முயற்சிக்கவேண்டும்."

எம். பி. யின் நம்பிக்கை

வல்வெட்டித்துறை, செவ். தேசிய அரசாங்கம் பதவிக்குவந்து ஒரு வருடமாகிறது. சென்ற பல வருடங்களாகப் புறக்கணிக்கப்பட்ட எமது பிரதேசங்கள் காலக்கிரமத்தில் பல மூன்னேற்றங்களை அடையும் என்பது எங்கள் நம்பிக்கையாகும்.

இவ்வாறு பருத்தித்துறை எம். பி. திரு, கே. துரைரத்தினம் பொலிகண்டி உபதபாற்கந்தோர் தந்தி, டெலிபோன் தொடர்பை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசுகையில் கூறினார். எம். பி. யாழ். மாவட்ட தபால் அதிபருடன் டெனிபோனில் உரையாடிச் சேவையைஆரம்பித்துவைத்தார். இவ்வைபவத்துக்கு திரு. செல்லக்கண்டுதலைமை வகித்தார்.

பேற்றோர் தின விழா

யாழ்ப்பாணம், புதன் நல்லூர் தெற்கு தமிழ்க் கலவன் பாடசாலையின் பெற்றோர் தினவிழாவில் யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி பொன்னம்பலம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளுவார்.

ஐஸாக் தம்பையா நினைவுவிழா

திருக்கோணமலை, செவ் கலாநிதி ஐஸாக் தம்பையாவின் நினைவுவிழா இந்துக்கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் திரு. கே. சிவபாலன் தலைமையில் நடைபெற்றது.

விழாவை ஆரம்பித்துவைத்த டாக்டர் கே. எஸ். சித்திரவேலு கலாநிதி ஐஸாக் தம்பையாவின் சமய இலக்கிய ஆய்வுத்திறனாற்றி விரிவாக எடுத்துக் கூறினார்.

திருக்கோணமலை காரியாதிகாரி பேசுகையில் கலாநிதி ஐஸாக் தம்பையாவின் நூல்களை மறுமலர்ச்சியுறச் செய்யவேண்டும் என்றும் அவரது சமரச மேம்பாடு சமயநெறிப் போதனைகள் பாராட்டிற்கு உரியனவென்றும் தெரிவித்தார்.

ஆசிரியர் மா. பீதாம்பரமும் மற்றும் பலரும் சொற்பொழிவாற்றினார்கள். செயலாளர் டே. இ. கஸ்யெசன் நன்றியுரை கூறினார்.

புதிய நிர்வாகிகள்

உடுப்பிட்டி, திங்கள் புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் வித்தியாசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டம் தலைமையாசிரியர் திரு. ஜே. எஸ். சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

பாடசாலை வளர்ச்சி, தேவைகள், அரசாங்க உதவி என்பன சம்பந்தமாகத் தலைவரும், பெற்றோர் கடமைகள் பற்றித் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. மா. முருகேசுவும் சொற்பொழிவாற்றினர்.

நடப்புவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு ஜே. எஸ். சிதம்பரப்பிள்ளை, உபதலைவர்: திரு. மா. முருகேசு, செயலாளர்: திரு. கு. பசுபதிப்பிள்ளை, பொருளாளர்: திரு. கா. க. கனகசுந்தரம்.

ஃ ஃ ஃ

நயினாதீவு, திங்கள் நயினாதீவுவிநாகயர்சந்தித் தண்ணீர்ப்பந்தல் சபையின் புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

போஷகர்: திரு. வே. சி. நாகலிங்கம், தலைவர்: திரு. சி. பொ. இராசரத்தினம், உபதலைவர்: திரு. சா. மகாதேவா, காரியதரிசி: திரு. ந. லோகநாதன், உபகாரியதரிசி: திரு. சு. சோதிலிங்கம், தனாதிகாரி: திரு. பொ. தில்லைநாதன், உபதனாதிகாரி: திரு. கா. இராசலிங்கம், கணக்காளர்கள்: திருவாளர்கள் க. ஆறுமுகம், த. சச்சிதானந்தம். எட்டுப்பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

ரசிகர்கள் ஏமாற்றம்

யாழ்ப்பாணம் புதன் யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெறவிருந்த போட்டி எதிர்பாராதவிதமாக மத்தியஸ்தர் சமூகம் கொடுக்காத காரணத்தால் போட்டி நடைபெறாது விட்டது. இது ரசிகர்களுக்கு ஏமாற்றத்தை அளித்தது.

விமானசேவை ரத்து

கல்கத்தா, மார்ச் 22 கல்கத்தாவிலிருந்து நேற்று ஏர் இந்தியா விமானத்தின் 9 சேவைகள் ரத்துச்செய்யப்பட்டன. விமான சிப்பந்திகளிடையே ஏற்பட்ட சம்பந்தமான [illegible] அவை ரத்துச்செய்யப்பட்டன.

பிரதேச சபைகள் பற்றி தமிழரசுக்கட்சியின் யோசனை

கொழும்பு, புதன்

பிரதேச சபைகள் நிறுவுவது பற்றியும் தமிழ் மக்களுக்கு அரசாங்கம் கொடுக்கவிருக்கும் இதர சலுகைகள் பற்றியும் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு பார்லிமெண்டின் அடுத்த கூட்டத்தொடர் ஆரம்பமாகும்வரை காத்திருப்பதாக தமிழரசுக் கட்சித்தலைவர்கள் அரசாங்கத்திற்கு அறிவித்திருப்பதாகத் தெரிகிறது.

நாட்டின் பொதுநன்மையைக் கருதியே தமிழரசுக் கட்சி இந்த முடிவுக்குவந்திருப்பதாகவும் தற்போதைய சூழ்நிலையில் அரசாங்கத்தின் கவனத்தை வேறு திசையில் திருப்புவதன் மூலம் நாட்டின் அபிவிருத்தித்திட்டங்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தத் தமிழரசுக் கட்சியினர் விரும்பவில்லையென்று அறிவித்திருப்பதாகத் தெரிகிறது.

தமிழ்மொழி உபயோகம் பற்றிய சட்டத்தை பார்லிமெண்டில் கொண்டுவந்து நிறைவேற்றியதன் மூலம் சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்கு அரசாங்கம் பாதுகாப்பளிக்க உறுதி கொண்டிருக்கிறது என்பதைச் சிறந்த முறையில் நிரூபித்துவிட்டதால், பிரதேச சபைகள் பற்றிய சட்டம் கொண்டுவரப்படுவதில் தாமதம் ஏற்படுவதினால் எவிதுத பயமும் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை என்றும் தமிழரசுக் கட்சியினர் அபிப்பிராயப்படுவதாகவும் அறியப்படுகின்றது.

அரசாங்கசேவையில்

தகுதியின்மையை நிவர்த்தி செய்யவேண்டும்

தபால்தந்தி சேவையாளர் கூட்டத்தில் பேச்சு

வவுனியா, திங்கள் அரசாங்க சேவையில் பெரிய பதவி வகிப்பவர்களிடம் எல்லாம் தகுதியின்மை நிலவுவதை நிவர்த்தி செய்ய அரசாங்கம் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். அப்படிச் செய்யாவிடின் சிறந்த திட்டங்கள் எல்லாம் பயன்படாமல் போய்விடக்கூடும் என்று வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற தபால், தந்தி, தொலைபேசி தொடர்பு சேவையாளர்சங்கத்தின் வவுனியா கிளையின் இரண்டாம் வருடக் கூட்டத்தில் பேசும்போது சங்கத் தலைவர் திரு. வில்பிரட் பெரேரா கூறினர்.

திரு. கே. ராமச்சந்திரன் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். காரியதரிசி திரு. ஆர். சிவயோகத்தினால் பல தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன

திரு. பெரேரா தொடர்ந்து பேசுகையில் ஐக்கிய இலங்கையை உருவாக்க சங்கம் தன்னால் இயன்றதைச் செய்யும் என்றார். தொழிற்சங்கங்கள் சுதந்திரமுள்ளனவாகவும் அரசியல் தொடர்பு அற்றவையாகவும் இருக்க ஆவன செய்ய வேண்டும். 21 அம்சக் கோரிக்கைக்கு நடந்த கதியும், ஜனவரி 8-ம் திகதி நடந்த பொதுவேலை நிறுத்தமும் தொழிலாளர்களைக் கண்விழிக்கச் செய்துவிட்டனவென்றும் அவர் குறிப்பிட்டார்.

சங்கத்தின் வவுனியாகிளை தலைவர் திரு. கே. ராமச்சந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினர்.

புதுவருடநிர்வாகிகளாகப் பின்வருபவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் கே. ராமச்சந்திரன், காரியதரிசி- ஆர். சிவயோகநாதன், உபகாரியதரிதியும் தனாதிகாரியும்-சி. சிவலோகநாதன். 10 பேர்கொண்ட கமிட்டியும் தெரிவுசெய்யப்பட்டது.

எம்.பி.யின் ஞாபகார்த்தமாக சிரமதானம்

பருத்தித்துறை, செவ். கட்டைவேலி கிராமச் சபை உபதலைவராகக் கடமையாற்றிய திரு. மு. இரத்தினசபாபதியின் வேண்டுகோளுக்கிணங்க, மறைந்த மூதூர் எம். பி. திரு. ஏகாம்பரத்தின் ஞாபகமாகத் தமிழ் அரசுக்கட்சியின் அல்வாய் வடக்குக் கிளையின் அங்கத்தவர்களும், பல்கலைக்கழப் பிரவேசப் பரீட்சைக்குத்தோற்றிய மாணவர்களும், வியாபாரிமூலை விரபத்திரகோவில் வீதிகளையும் மடங்களையும் 2 நாட்களாகச் சிரமதானமூலம் திருத்திக்கொடுத்தனர். திரு. நா. தம்பிராசாவினால் போசனம் வழங்கப்பட்டது.

நெசவாளர்களுக்கு
ஓர் அறிவித்தல்

நீங்கள்
உற்பத்தி செய்யும்
சகல
கைத்தறி ஜவுளிகளையும்
நியாயமான
விலைகளில் எம்மிடம்
விற்பனை செய்யலாம்.
எஸ். ஆர். செல்லத்துரை
216, கே.கே.எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.
போன்: 296

லக்ஷபான
பாட்டரிகள்
இறக்குமதியாகும் எந்த பாட்டரியையும் விட குறைந்த செலவில் கூடிய சேவை தருகின்றன.

ஏனெனில்:

★ அவை, பூரண சக்தியுடனே தொழிற்சாலையிலிருந்து புதுமை குலையாமல் உங்களை வந்தடைகின்றன. இறக்குமதிபாட்டரிகள் போல சேமிப்பில் இருப்பதால் அவை சக்தி இழப்பதில்லை

★ லக்ஷபானாபாட்டரிகள், சர்வதேச மின் நுணுக்க கமிஷன்விதிக்கும் தரங்களுக்கு நிகரான அதி உன்னத சிறப்பு வாய்ந்தவை என்று பரீட்சித்து நிரூபிக்கப்பட்டவை.

★ லக்ஷபானா பாட்டரிகள் இறக்குமதியாகும் எந்த ரகங்களையும் விட மிக மலிவானவை.

எலி. பன்ட் லேட்
கார்ப்பரேஷன்
லிமிட்டெட்

அழகிய உடைகள்
அணியவேண்டுமா?
உடனே விரையுங்கள்
'பொகுமால்ஸ்'
சிறியோர் முதல் பெரியோர் வரை
பலவிதமான டிசைன்களில் தினுசுகள்
தைத்துக்கொடுக்க நகரிலே ஒரு
புதிய ஸ்தாபனம்
பொகுமால்ஸ்
(அபிமான புடவைமாளிகை)
43, பெரியதெரு, :-: யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரம்

S. R. S.
ஜவுளி மாளிகை
புதுவருடத்திற்கான
புதுரக
பிடவைத்தீனுசுகளை
மலிவான விலைகளில்
முன்னதாகவே
வந்து தெரிவுசெய்யுங்கள்
புதிய டிசைன்களில்
ஏராளமான ஜவுளிகளை
வரவழைத்திருக்கிறோம்.
எஸ். ஆர். செல்லத்துரை
216, கே.கே.எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.
போன்: 296

தேவை

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வரைவுள்ளது).

பதவி: லொறிச் சாரதி.

மாதவேதனம்:
ரூ 80/- - 150/-
14/- தர 5/- ம்
சம்பள நிர்ணய சபைப்படிகளும்.

பிணைப்பணம்: ரூபாய் 500/- (ஐந்நூறு ரூபாய்).

வயது: 25 முதல் 45 வரை 31-3-66-ல்.

கல்வித்தராதரம்: 7-ம் வகுப்புச் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் தங்கள் முழுப்பெயர், விலாசம், லொறிச்சாரத்திய அனுமதிப்பத்திரம் (Driving Licence) பெற்ற திகதி, முந்திய அனுபவங்கள் முதலிய விபரங்களைத் தங்கள் சொந்தக் கையெழுத்தில் எழுதி சமீபத்தில் பெற்ற இரண்டு நற்சான்றுப் பத்திரங்களுடன் கீழ்க்கண்ட விலாசத்திற்கு 31-3-66 வியாழக்கிழமைக்கு முன் கிடைக்கக் கூடியதாகப்பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கவும்

காரியதரிசி.

யாழ். ப. நோ. கூ. ச.
சமாசம்.
74/8, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். 2065

கொழும்பு

புதன் 23-3-66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 படத்திலிருந்து.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வயலின், 7-30 உங்கள் பிரச்னை, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 புல்லாங்குழலும் கிளாரினெட்டும், 9-30 பாட்டு, 10-00 நேயர் விருப்பம்.

"மாணவர்களுக்கு நாட்டுப் பற்றும்பிறஉணர்வும்வேண்டும்"

விளையாட்டுப் போட்டியில் உதவி அதிபர் பேச்சு

உடுப்பிட்டி, செவ். உடற்பயிற்சியும் நடைபெற்றது.

"நமது கல்லூரிக்கு மட்டுமல்ல இலங்கை நாட்டிற்கே இந்த வருடம் மிகவும் சுபிட்சகரமானது. மாணவர்களின் முன்னேற்றம் வருடாவருடம் வளர்ந்து கொண்டே வருகிறது. நமது மாணவர்களும் கடேற் பயிற்சி, சாரணர் பயிற்சி முதலியன பெற்று வருகிறார்கள். நமது அதிபர் ஒரு செயல்வீரன். சில ஆண்டுகளுக்கு முன்னர் பெற்றார் பிள்ளைகளை இராணுவப் பயிற்சிக்கு அனுப்பத் தயங்கினார்கள். பிள்ளைகளிடத்திலே நாட்டுப்பற்றும் வீர உணர்வும் அவசியம் ஏற்படவேண்டும் என்பதைப் பெற்றோர்கள் இப்போது உணர்ந்து கொண்டார்கள். பெற்றோரின் ஊக்கம்தான் பிள்ளைகளின் முன்னேற்றத்திற்குக் காரணமாகிறவு சுதந்திர இலங்கையின் கல்லூரிகள் ஒவ்வொன்றிலும் தேசிய விளையாட்டுக்கள் நடாத்தப்படுவதையே நாம் விரும்புகிறோம்." இவ்வாறு நெல்லியடி அரசினர் மத்தியமஹா வித்தியாலய உதவிஅதிபர் திரு. கே. தர்மலிங்கம் மேற்படி கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டிக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினார்

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"மாணவர்கள் ஆசிரியர்களின் நியாயமான செயல்களுக்கும் கட்டளைகளுக்கும் பணிந்து பண்புடன் ஒழுக வேண்டும். விளையாட்டு மூலம் கல்விக்கும் உடலுக்கும் உற்சாகமளிக்க வேண்டும். தேசிய உணர்வையும் நாட்டுப்பற்றையும் ஏற்படுத்த வேண்டும்

கம்பன், பாரதி, இளங்கோ, வள்ளுவன் ஆகிய நான்கு இல்லங்களுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் பாரதி இல்லம் வெற்றியீட்டியது. பாரதி 144 புள்ளிகளும் இளங்கோ 139 புள்ளிகளும் கம்பன் 99 புள்ளிகளும் பெற்றன. இவ்வருட சாம்பியன்களாக ஆண்களில் செல்வன்கள் என். சிவபாலன் (வள்ளுவன்), ஆர். குகராசா (கம்பன்), ஜி. ஞானரமணன், கே. சிறீதரன் (பாரதி), வி. இராமநாதன் (பாரதி) ஆகியோரும், பெண்களில் செல்விகள் எஸ். ஜெகதாதேவி (இளங்கோ), கே. யோகாம்பிகை (பாரதி), வி. சீதாலட்சுமி (இளங்கோ), பி. ஜெயகுமாரி (இளங்கோ) கே. கமலாம்பிகை (பாரதி) ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

அணிநடைப் போட்டியில் இளங்கோ இல்லம் முதலாமிடத்தையும், கம்பன் இரண்டாமிடத்தையும், வள்ளுவன் மூன்றாமிடத்தையும் பெற்றன. இடைவேளையின்போது உடுப்பிட்டி வட்டார பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டியில் மேற்படி கல்லூரியின் சார்பில் வெற்றியீட்டிய 13 வயதுக் குட்பட்ட மாணவர்களின்

புதுவருட போட்டிகள்

பருத்தித்துறை, திங்கள் எதிர்வரும் தமிழ்-சிங்கள புத்தாண்டு தினத்தின் போது பல விளையாட்டுப் போட்டிகளையும் நடத்துவதற்கு பருத்தித்துறை பொலிஸார் ஒழுங்குகள் செய்துள்ளனர்

கைப்பந்தாட்டப் போட்டி 25 மைல் தூர சைக்கிள் போட்டி, ஐந்து மைல் மரதன் ஓட்டப்போட்டி வாணவேடிக்கைப்போட்டி, தாச்சிப் போட்டி ஆகியவை நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

உதைபந்தாட்டம்

வெற்றி தோல்வி இல்லை

யாழ்ப்பாணம், செவ்வாய் யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற சுற்றுக்கிண்ணப் போட்டியில் பாஷையூர் சென். அந்தனீஸ் விளையாட்டுக்கழகமும் கிறீன் பீல்ட் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன. போட்டியின் ஆரம்பத்தில் விறுவிறுப்புக் காணப்படவில்லை. ஆட்டம் தொடங்கி பனைந்து நிமிடத்தில் கிறீன் பீல்ட் கோஷ்டியின் முன்னணி வீரர் ஏ. குலசிங்கம் ஒரு கோலைப் போட்டார். பின்பு அடுத்த பதினைந்து நிமிடத்தில் கிறீன்பீல்ட் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த பின்னணி வீரர் சி. எஸ். ஜோன்பிள்ளை என்பவர் ஒரு கோலைப் போட்டார்.

இடைவேளைக்குப் பிறகு இரண்டு கோஷ்டிகளும் மிகவும் விறுவிறுப்பாக விளையாடத் தொடங்கின. போட்டி முடிவதற்கு பதினைந்து நிமிடங்கள் வரை கிறீன்பீல்ட் கோஷ்டியே இரண்டு கோல்களைப் போட்டிருந்தனர்.

போட்டி முடியும் தறுவாயில் ஒரு 'பனல்ட்டி' மூலம் சென். அந்தனீஸ் ஒரு கோலை எடுத்தனர். கடைசி மூன்று நிமிடத்தில் எஸ். பெனடிக்ற் என்பவர் மறு கோலைப் போட்டார். அப்பொழுது இரு கோஷ்டிகளும் தலா இரண்டு கோல்களை எடுத்திருந்தனர். இந்த வேளையில் இரண்டு கோஷ்டிகளிலும் உற்சாகம் காணப்பட்டது. சென். அந்தனீஸ் கோஷ்டியைச் சேர்ந்த வலது மூலை வீரர் ஏ. ஜோர்ஜ் என்பவர் முறைகேடாக விளையாடியதன் பேரில் மத்தியஸ்தரால் வெளியேற்றப்பட்டார்.

இப்போட்டியில் சென். அந்தனீஸ் கோஷ்டியைச் சேர்ந்த எஸ். பெனடிக்ற் பாராட்டத்தக்க முறையில் விளையாடினார்.

ஊர்காவற்றுறை, செவ். காரைநகர் வடக்கு நல்லதம்பி வைத்தியநாதன் என்பவர் அதே இடத்தைச் சேர்ந்த வயிரவி சுந்தரனுக்கு படுகாயம் விளைவித்ததாக குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நீதிபதி எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு மூன்று மாதம் சிறைத்தண்டனை விதித்தார்.

தசாக அழைப்பு

விசுவாவசு ஆடி பங்குனி மீ 2உ (15-3-66) செவ்வாய்க்கிழமை இரவு எனது மகன் வெங்கடேச சர்மாவின் அருமை மனைவி சரஸ்வதி அம்மா அவர்கள் சிவபதமடைந்தனர். அன்னாரது தசாகக் கிரியை முதலியன 24-3-66 வியாழக்கிழமை முதலாக நடைபெறும். நண்பர்களும் உறவினர்களும் இந்த அறிவித்தலை ஏற்றுக் கொள்க. ச. சுந்தரேஸ்வர ஐயர், தபால்கந்தோர், காரைநகர். 2211

வரி விளம்பரம்

தேவை

எமது தயாரிப்புகளை கொண்டு சென்று விற்பனை செய்வதற்கு பெண் விற்பனையாளர்கள் தேவை. நாள் சம்பளம் ரூபா 10/- 28-3-66 க்கு முன் விண்ணப்பிக்கவும். குமார் இன்டஸ்ரீஸ், 122, கொழும்புத்துறை கிழக்கு, கொழும்புத்துறை. 2212

யாழ்ப்பாணம் பெரிய கடை வீதியில் ஆரம்பமாகவிருக்கும் வர்த்தக ஸ்தாபனம் ஒன்றுக்கு மனேஜர் தேவை. தராதரம்: ஆங்கில அறிவுடையவரும் (வயது 25 முதல் 40) நம்பிக்கையும், நாணயமும் உடையவராகவும் ரொக்கம் ரூ. 5000/- பிணை கட்டக்கூடியவராயும் இருக்க வேண்டும். சம்பளம்: 250/- முதல் 300/- டிப்பாசிட் தொகைக்கு 6 வீத வட்டி பெற்றுக்கொள்ளலாம்.) விளம்பர இல. 2190, ஈழநாடு மே/பா என எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 2190

விற்பனைக்கு

நெசவாளர்களுக்கோர் அரிய சந்தர்ப்பம். கைத்தறி சேலைகளுக்கு பூப்போடும் பற்றேன் (Pattern) புத்தகங்களை எம்மிடமிருந்து வி. பி. பி. மூலம் பெற்றுக் கொள்ளலாம். எஸ். சவிரிமுத்து, 73, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 2210

விற்பனைக்கு

புதிய குடியியல் எட்டாம் வகுப்பு, நூலாசிரியர்கள்: வ. மகாதேவன் B. A, Dip. in Ed. (Ceylon), வி. சிவசுப்பிரமணியம் B.A. Economics(Ceylon) பிரசுரம்: ஸ்ரீ காந்தா அச்சகம்-புத்தகசாலை, 213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். விலை ரூபா: 2-50. 2198

கீழ்க்காணும் புடவைக் கடைத் தளபாடங்கள்: 6 கண்ணாடி அலுமாரிகள், 3 ஷோகேஸ்கள். உரிமையாளர்: பி. பிரான்சிஸ்பிள்ளை, ஊர்காவற்றுறை. 2214

4 3/4 பரப்பு வீடுகட்டக் கூடிய காணி தெல்லிப்பளை புதிய ஆஸ்பத்திரிக்கும் ரயில்வே ஸ்ரேசனுக்குமிடையில் ரூ. 12,500 அல்லது கிட்டிய பெறுமதி. தொடர்புகொள்க: செ. சிவபாதம், இலங்காதீப சேமலாபநிதிச் சங்கம், சண்டிலிப்பாய். 2203

வாடகைக்கு

காரைநகர் துறைமுகம், வியாபாரஸ்தலம் வாடகைக்கு. விசாரிக்கவும் பொன்னம்பலம். 2208

வெள்ளப்பெருக்கு

ஜாகர்த்தா, மார்ச் 22 மத்திய ஜாவாவில் கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் மழைகாரணமாக இங்கு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

அறிவித்தல்

பிறீடம் மார்க் சூடம்

மேற்சொல்லப்பட்ட எங்கள் தயாரிப்பான, பிறீடம் மார்க் சூடத்தில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டைத் தொடர்ந்து தற்போது சூடம் மிகக்கூடுதலான விலையில் விற்கப்படுவதாக எமக்குச் செய்திகள் கிடைத்துள்ளதால், சூடம் உற்பத்தி செய்வதற்குத் தேவையான மூலப் பொருட்களுக்குப் போதியளவு அனுமதிப்பத்திரங்கள் கிடைக்காமையால், ஏற்பட்டுள்ள மூலப்பொருள் தட்டுப்பாடு காரணமாக, சூடம் உற்பத்தி பெரிதும் குறைக்கப்பட்டு, எமது வாடிக்கையாளர்களுக்கும், வியாபாரிகளுக்கும், சூடம் சரிவர விநியோகம் செய்ய முடியாத நிலைமையில் இருந்த போதிலும், சூடம் உற்பத்திசெய்ய ஆரம்பித்த காலம்முதல் இன்றுவரை, நிர்ணயிக்கப்பட்ட விலையில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை என்பதையும், மூலப் பொருட்களுக்கு வேண்டிய அனுமதிப்பத்திரங்கள் கிடைத்து சூட உற்பத்தி மீண்டும் ஆரம்பித்ததும், சூடம் மீண்டும் ஒழுங்காக விநியோகம் செய்யப்படும் என்பதையும் வாடிக்கையாளர்களுக்கும் பொதுஜனங்களுக்கும் இத்தால் அறியத் தருகிறோம்.

மனேஜர்,
பிறீ லங்கா இன்டஸ்ட்ரீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையில்லா பிரச்னை தீர்க்க வவனியா எம். பி. யோசனை

வவனியா, செவ்.

வடபகுதியில் வேலையில்லாப் பிரச்னைக்கு தீர்வுகாணும் முயற்சியில் தற்காலிக பிரதமர் திரு. ஜே. ஆர். தலைமையில் சமீபத்தில் நடைபெற்ற மகாநாட்டில் திரு. ஜே. ஆர். விடுத்த வேண்டுகோளுக்கிணங்க வவனியா எம். பி. திரு. த. சிவசிதம்பரம் பின்வரும் யோசனைகளைத் தெரிவித்துள்ளார்.

வவனியாவில் நீர்ப்பாசனத்துக்கு நன்கு பயன்படத்தக்க இயற்கை நீரூற்றும் குளங்களும் முறையாக உபயோகப்படுத்தப்படாமலிருக்கின்றன. இவற்றையெல்லாம் பயன்படத்தக்க முறையில் திட்டங்களைத் தயாரித்தா இது வவனியாமாவட்டத்திலுள்ள வேலையற்றவர்களுக்கு மட்டுமின்றி வடபகுதியிலுள்ள ஏனையோருக்கும் வேலைவாய்ப்பளிக்க உதவுவதாக இருக்கும். இதனால் உப உணவுப் பொருள்களின் உற்பத்தியையும் அதிகரிக்கலாம்.

செம்மலை, மாத்தளன் போன்ற உப்பு விளையும் இடங்களில் போதிய அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டால் வேலைவாய்ப்பு பலருக்கு அளிக்க வகை செய்வதோடு நாட்டுக்குத் தேவையான உப்பும் பெறக்கூடியதாக இருக்கும்.

இந்த இடங்களுக்குப் போக்குவரத்துச் செய்யும் ரஸ்தாக்கள் செப்பனிடப்படுவதாலும் மிக்க நன்மை பெறக்கூடியதாக இருக்குமென்றும் எம். பி. தெரிவித்துள்ளார்.

தமிழ்காவலன்...

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

ராகக் கடமையாற்றிய திரு. குணசேகரம் பின்பு கல்விப் பகுதியில் வித்தியாதரிசியாகச்சேர்ந்து விரைவில் வித்தியாதிகாரியாகப் பதவியேற்றம் பெற்றார். சுகவீனம் காரணமாக நேரத்தோடு அரசாங்க சேவையிலிருந்து விலகியவர் தமது ஓய்வு காலத்தில் இலங்கைச் சரித்திரத்தையும், மனித வரலாற்றையும் ஊன்றி ஆராய்ச்சி செய்து வந்தார். ஆங்கிலத்திலும் தமிழிலும் நன்கு பாண்டித்தியம் உள்ளதோடு சிங்களம், சம்ஸ்கிருதம், பாளி முதலிய பிறமொழிகளிலுள்ள சரித்திர ஆராய்ச்சி நூல்களையும் துறைபோகக் கற்றவராவார்.

'ஓர் அன்பன்.

REGAL—JAFFNA
NOW SHOWING!
Sterling Hayden
In
FLAT TOP
(War Film Color)

ராஜா
(யாழ்ப்பாணம்)
2-00, 6-30, 9-45க்கு மட்டும்
கங்கா ஜமுனா
(ஹிந்தி)
4-15க்கு மட்டும்
T. A. M. I. SHOW

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
ஏ. வி. எம். ராஜன்-புஷ்பலதா
நடித்த
சித்திராங்கி

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை) மொடேர்ன் (பதுளை)
மொடேர்ன் (பண்டாரவளை) விஜிதா (அட்டன்)

நாகேஷ் கே. ஆர். விஜயா நடித்த
சர்வர் சுந்தரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
காமினி பொன்சேகா நடித்த
கம்பரலிய

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் (ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேலை வீதி 61-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு மார்ச்மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

யாழ். மேயர் பிரச்னை

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

அமுலில் இருக்கும் வரை அவசியமில்லை. ஆகவே 1-1-64-ல் இருந்தே இவர் ஒரு சட்டபூர்வமான அங்கத்தவராக இருக்கவில்லை.

17-ம் வட்டார அங்கத்தவரான திரு. என். அன்ரனி அங்கத்தவரான பொழுது ஸ்தலஸ்தாபன தேர்தல் விதிக்கமைய 21 வயதாகாதவர் வயது குறித்து மாநகரசபை தேர்தல் சட்டத்தில் திருத்தம் ஏதாவது கொண்டுவரப்படவில்லை. ஆகவே முன்னைய தேர்தல் விதிப்படி 21 வயதானவர் தான் அங்கத்தவராக இருக்கத் தகுதியுடையவர். கோர்ட்டில் அணைக்கப்பட்டிருக்கும் பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின்படி இவர் (என். அன்ரனி) 21 வயதானவருமல்ல. ஆகவே சட்டபூர்வமான அங்கத்தவராக இவர் இருந்திருக்கவில்லை.

எதிர் மனுதாரான கமிஷனர் திரு. ஹட்சன் செல்வராசா சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. சி. பொன்னம்பலம், தமது பக்கத்துவாதத்தை எடுத்துக் கூறும்போது தெரிவித்ததாவது: 1-1-64-ல் இருந்து ஏனைய அங்கத்தவர்கள் மாநகரசபைக்கு தெரிவுசெய்யப்பட்டபோது எதிர்மனுதாரர்களாக குறிக்கப்பட்ட 2-ம், 3-ம் எதிர் மனுதாரர்களானவர்கள் (ஏ. ஜி. ராஜசூரியார், என். அன்ரனி) அங்கத்தவர்களாக தெரிவுசெய்யப்பட்டனர். அந்நேரம் இவர்கள் தெரிவிற்கு எவ்வித ஆட்சேபனையும் இருக்கவில்லை. அந்நேரம் தொடக்கம் இவர்கள் ஏனைய அங்கத்தவர்களுடன் சேர்ந்து சக அங்கத்தவர்களாக சபையின் நடவடிக்கைகள் யாவற்றிலும் பங்குபற்றி வந்தனர். 8-3-66 வரை மனுதாராகிய மேயரும் இவர்களுடன் சேர்ந்து இயங்கிவந்துள்ளார். நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட 8-3-66 வரை இவர்கள் இருவருடைய அங்கத்துவத்தின் சட்டபூர்வமான நிலைபற்றியோ, அல்லது வேறு எதுவிதத்திலோ, எவ்விதமான ஆட்சேபமும் தெரிவிக்காது இருந்தவர் இப்பொழுது மட்டும் ஆட்சேபம் தெரிவிக்க எங்கு நியாயம் கண்டு பிடித்தார்.

ஸ்தலஸ்தாபன சபையின் அங்கத்தவரை அவர் அங்கத்தவரல்ல என்று பிரகடனம்செய்யும் உரிமை சுப்பிறீம் கோட்டிற்கே உரியது. இந்தக் கோட்டிற்கு இவ்விதமான பிரகடனம்செய்வதற்கு உரிமை இல்லாத விடத்து இதுபற்றி விசாரணை செய்யவும் சட்டம் இடம்கொடுக்காது.

2-ம், 3-ம் எதிர் மனுதாரர்களான ஏ. ஜி. ராஜசூரியரும், என். அன்ரனியும் சபையில் அங்கத்தவர்களாக இருந்து வாக்குகொடுப்பது முறையற்றது என்பது பற்றிய பிரச்னையை சுப்பிறீம் கோட்டிற்கு கொண்டுபோக வேண்டும். ஏனெனில் சுப்பறீம்கோர்ட்டே இதுபற்றி தீர்மானிக்கமுடியும்.

இவர்கள் இருவரும் மாநகரசபையில் சட்டபூர்வமான அங்கத்தவர்கள் என்பதை மனுதாரரான மேயர் திரு. எஸ். நாகராஜாவும் அங்கீகரித்துக்கொண்டு 8-1-66க்குப் பின் நடைபெற்ற சபைக்கூட்டங்களுக்கும் அழைப்பு அனுப்பியிருந்திருக்கிறார். திரு. நாகராசாவிற்கு முன்பு இச்சபைக்கு இருந்த இரு மேயர்களின் தெரிவுக்கும் இவ்விரு அங்கத்தவர்களும் சமூகமளித்து வாக்களித்திருக்கிறார்கள். அந்நேரத்தில் அவர்களுக்கு எதிராக எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கப்படவில்லை.

அடுத்ததாக எதிர்மனுதாரர்களும் (ஏ. ஜி. ராஜசூரியர், என். அன்ரனி) கோர்ட்டில் ஆஜராகாமல் இருக்கும் பொழுது அவர்கள் இல்லாத நிலையில் இவ் விசாரணை நடத்தி அவர்களுக்கு எதிராக ஒரு நியாயத்தை வழங்குவது மனித தர்மத்திற்கு எதிரானது. ஆகவே இவ் விசாரணை அவர்கள் முன்னிலையில் நடைபெறக்கூடிய ஒழுங்கு இருக்கவேண்டும்.

மாநகரசபை சட்டப்படி அச்சபையின் கருமங்கள் பற்றி நீதிமன்றங்களில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கக்கூடாது என்பது ஒரு முக்கியமான விதியாகும் தவிர்க்கமுடியாததிலையில் நீதிமன்றங்களில் நடவடிக்கை எடுக்கவேண்டுமேயானால், இந்த விசாரணைக்கு முன்பதாக ஒரு மாத அவகாசம் கொடுக்கவேண்டும். இவ்வித நிலையில் 24-3-66-ல் (நாளை) நடத்தப்படவிருக்கும் விசேஷ கூட்டத்தை தடைசெய்வதற்கு உத்தரவு பிறப்பிப்பது முறையானதல்ல.

வழக்கறிஞர்களின் வாதங்கள் முடிவடைந்ததும், நாளை (இன்று) தீர்ப்பு வழங்கப்படுமென நீதிபதிதெரிவித்தார்.

மிருக பலியை நிறுத்தும் முயற்சி

யாழ்ப்பாணம், புதன்.

சுழிபுரம் பத்திரகாளியம்மன் கோவிலில் நடைபெறவிருக்கும் மிருகபலியை நிறுத்தும்படி இ. போ. ச. இந்துஊழியர்சங்கப் பிரமுகர்கள் அடங்கிய தூதுகோஷ்டியொன்று நேற்று அக் கோவில் முகாமையாளர்களில் ஒருவரான திரு. க. சின்னையாவை சந்தித்து கேட்டுக்கொண்டது:

மிரு பலியை நிறுத்த வேண்டியதன் அவசியத்தைத் தூதுகோஷ்டியினர் விளக்கியபொழுது திரு. சின்னையா மிகவும் அக்கறையோடு கேட்டதாகவும், கோயிலை நிர்வகிப்பதற்கு போதிய வசதிகள் இன்மையால்தான் இப்படியான வேள்விகள் நடத்தப்படுவதாக அவர் அபிப்பிராயப்பட்டதாகவும் தூதுக்கோஷ்டியினர் 'ஈழநாடு' நிருபரிடம் தெரிவித்தனர். வேள்வி நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் எல்லாம் முடிவடைந்துவிட்டதாலும். வேறுபலகாரணங்களினாலும் இம்முறை அது நடைபெறுவது தவிர்க்கமுடியாதென்றும் இனிமேல் நடைபெறாமல் இருப்பதுபற்றி முடிவு செய்யலாமென்றும் அவர் அபிப்பிராயப்பட்டதாகவும் தெரிகின்றது.

திரு. ந. பத்மராஜா தலைமையில் சென்ற இத் தூதுகோஷ்டியில் இ. போ. ச. இந்து ஊழியர்சங்கக் காரியதரிசி திரு. ஆ. பொன்னையா உபகாரியதரிசி திரு. நவரட்ணம், திரு. என். சதானந்தன், திரு. சித்சபேசன், செல்விகள் ஜெயகௌரி, ஜெயராணி, ஆகியவர்களும் இருந்தனர். சுழிபுரம் கிராமசேவகர் திரு. ஏ. சுவாமிநாதனின் ஆதரவுடன்தான் இவர்கள் கோவில் பிரமுகர்களைச் சந்தித்ததாகச் சொன்னார்கள். மேற்படி கோவிலுக்கு அவசியமானால் சங்கத்தின் மூலம் பொருளாதார உதவிகள் செய்வதாகவும் அவர்கள் கூறியுள்ளனர். கோயில்களில் நடைபெறும் மிருகபலிக்கு அடிப்படைக் காரணம் பொருளாதாரம்தான் என்றும், இந்துமத அபிமானிகள் இக்கோயில்களுக்குப் பொருளாதார உதவிகள் புரிய முன்வந்தால் எல்லா கோயில்களிலுமே உயிர்ப்பலியை நிறுத்திவிடலாம் என்றும் அவர்கள் அபிப்பிராயப்பட்டனர்.

சிரமதான முறையில் பாதை சீரமைப்பு

நெடுங்கேணி, செவ்.

நெடுங்கேணி காரியாதிகாரி பிரிவைச் சேர்ந்த கூழாங்குளம் ரூட் திருத்த வேலையைச் சிரமதான இயக்கத்தில செய்ய காரியாதிகாரி திரு. ஜே. செந்தில்நாதன் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 26-ம் திகதி ஆரம்பமாகும் இவ்வேலை தொடர்ந்து மூன்று தினங்களுக்கு நடைபெறும். 26-ம் திகதி காலை வவனியா அரசாங்க அதிபர் திரு. தசநாயக்கா குத்துவிளக்கேற்றி அங்குரார்ப்பணம் செய்துவைப்பார். வவனியா பாராளுமன்ற உறுப்பினர் திரு. தா. சிவசிதம்பரம் இவ்வைபவத்துக்குத் தலைமைதாங்குவார்.

யாழ்ப்பாணம் புதன்.

வழக்கறிஞர் திரு. எஸ். ஐ. நல்லையாவுக்கு சொந்தமான கடிகாரம் ஒன்று திருட்டுப் போனதையடுத்து யாழ்ப்பாணம் போலிசாருக்கு புகார் செய்யப்பட்டது. புகார் செய்யப்பட் இருபத்திநான்கு மணிநேரத்திற்குள் இக்களவுசம்பந்தமாக சந்தேகநபரையும் கடிகாரத்தையும் சார்ஜன்ட்துரைசிங்கம் பொலிஸ் நிலையத்தில் ஆஜர் செய்சள்ளார்.

சந்தேகநபர் இப்போது காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

பிணையில் செல்லுமாறு உத்தரவு

வல்வெட்டித்துறை, செவ்.

இம்மாதம் 7-ம் திகதி உடுப்பிட்டியில் செல்லப்பா இளையதம்பி என்பவருக்கு அடித்தும், அவரது சைக்கிளை அபகரித்துக் கொண்டு சென்றதாகவும் குற்றம் சாட்டி வல்லிபுரம் கதிரவேலு என்பவரை வல்வெட்டித்துறை பொலிஸார் பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் பதில் நீதிபதி முன்னிலையில் ஆஜார் செய்தனர்.

பதில் நீதிபதி கதிரவேலுவை 300 ரூபா பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டது

தமிழ்க் காங்கிரஸ் மகாநாடு

மேமாதத்தில் நடைபெறும்

வவனியா, செவ்.

தமிழ்க் காங்கிரஸ் தனது வருடாந்த மகாநாட்டை வரும் மேமாத நடுப்பகுதியில் வவனியாவில் நடத்தவிருக்கிறது.

மூன்றுநாட்களுக்கு நடைபெறவிருக்கும் இம்மகாநாட்டில் தமிழ்மக்களை எதிர்நோக்கியுள்ள பிரச்னைபற்றி முக்கியமாக ஆராயப்படும் என அறியப்படுகிறது. வேலையில்லாத் திண்டாட்டம்பற்றியும் இதர பிரச்னைகள் பற்றியும் மகாநாட்டில் ஆராயப்படவிருக்கிறது.

இம்மகாநாட்டுக்கான ஆயத்தங்களை வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் செய்துவருகிறார்.

இம்மகாநாட்டில் கட்சியின் சகல பிரமுகர்களும் கலந்துகொள்வார்களென அறியப்படுகிறது.

தேசிய சுவீப்

கொழும்பு, புதன்

இம்முறை தேசிய சுவீப் சீட்டிழுப்பு திருகோணமலையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org